









சுற்றுலா, பண்பாடு மற்றும்
அறநிலையங்கள் துறை

# சுற்றுலா

மானியக் கோரிக்கை எண்:29

## அறிவிப்புகள்
## 2024 - 2025

**கா. ராமச்சந்திரன்**
சுற்றுலாத் துறை அமைச்சர்



சுற்றுலா, பண்பாடு மற்றும்
அறநிலையங்கள் துறை

# சுற்றுலா

மானியக் கோரிக்கை எண்:29

## அறிவிப்புகள்
## 2024 - 2025


**கா. ராமச்சந்திரன்**
சுற்றுலாத் துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2024



12. தமிழ்நாடு சுற்றுலாப் பயணச்சந்தை (Tamil Nadu Travel Mart) ரூ. 1.00 கோடி செலவில் சென்னையில் நடத்தப்படும்.

தமிழ்நாட்டில் சுற்றுலாவை வெற்றிகரமாக மேம்படுத்தவும் மறக்க முடியாத அனுபவங்களை உருவாக்கி அதன் மூலம் சுற்றுலாப் பயணிகளை மீண்டும் மீண்டும் வரவழைப்பதற்கு விருப்பமான இடமாக தமிழ்நாட்டை நிலைநிறுத்துவது சுற்றுலாத் துறையின் நோக்கமாகும். தனியார் துறையின் குறிப்பிடத்தக்க பங்களிப்பையும் வெற்றிகரமான சுற்றுலா மேம்பாடு மற்றும் ஊக்குவிப்பையும் சுற்றுலாத் தொழில் சார்ந்துள்ளது.

தமிழ்நாட்டின் சுற்றுலா வளர்ச்சியை மேலும் மேம்படுத்த, பொது தனியார் கூட்டாண்மைகளை வலுப்படுத்துவதன் ஒரு முயற்சியாக, தமிழ்நாடு சுற்றுலாத் தலங்களை பிரபலப்படுத்துவதற்கும், நாடு முழுவதும் உள்ள சுற்றுலாப் பங்குதாரர்களுடனான கூட்டாண்மைகளை ஏற்படுத்துவதற்கும் பல்வேறு மாநில சுற்றுலாத் துறைகள் மற்றும் புகழ்பெற்ற சுற்றுலாத் தொழில் நிறுவனங்களை ஒருங்கிணைத்து தமிழ்நாடு சுற்றுலாப் பயணச்சந்தை ரூ. 1.00 கோடி செலவில் சென்னையில் நடத்தப்படும்.

**கா. ராமச்சந்திரன்**

சுற்றுலாத் துறை அமைச்சர்



# சுற்றுலாத் துறை

## அறிவிப்புகள்

## 2024-2025

1. அரியலூர் மாவட்டம் ஏலாக்குறிச்சி அடைக்கலமாதா தேவாலயப்பகுதி, சிவகங்கை மாவட்டம் பிரான்மலை பகுதி, திருநெல்வேலி மாவட்டம் விஜயாபதி மற்றும் தெற்கு கள்ளிக்குளம் தேவாலயப்பகுதி மற்றும் தூத்துக்குடி மாவட்டம் கழுகுமலை ஆகிய வழிபாட்டு சுற்றுலாத் தலங்களில் அடிப்படை வசதிகள் ரூ. 8.10 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

அரியலூர் மாவட்டத்தில் ஏலாக்குறிச்சி அடைக்கலமாதா தேவாலயப்பகுதி, சிவகங்கை மாவட்டம் பிரான்மலை பகுதி, திருநெல்வேலி மாவட்டம் விஜயாபதி மற்றும் தெற்கு கள்ளிக்குளம் தேவாலயப்பகுதி, தூத்துக்குடி மாவட்டத்தில் சமணர் படுகை மற்றும் தமிழ்நாட்டின் எல்லோரா என்று அழைக்கப்படும் கழுகுமலை ஆகிய வழிபாட்டு சுற்றுலாத் தலங்களில் ஊரணி மேம்பாடு, அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல், மின்விளக்கு வசதிகள், திடக்கழிவு மேலாண்மை, குடிநீர் வசதி போன்ற பணிகள் ரூ.8.10 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

2. திண்டுக்கல் மாவட்டத்தில் அமைந்துள்ள புல்லாவெளி அருவி, கொட்டுவரை அருவி மற்றும் கோட்டை நங்காஞ்சியாறு அணைப் பகுதி, மதுரை மாவட்டத்தில் அமைந்துள்ள குட்லாடம்பட்டி அருவி மற்றும் திருச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள புளியஞ்சோலை அருவி ஆகிய சுற்றுலாத் தலங்களை மேம்படுத்த ரூ.10.20 கோடி மதிப்பீட்டில் பல்வேறு வசதிகள் ஏற்படுத்தப்படும்.

அழகிய மலைப் பகுதியின் இயற்கை அழகை இரசிப்பதற்கும் அங்குள்ள அருவியில் குளித்து மகிழ்வதற்கும் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வருகை புரிகின்றனர். திண்டுக்கல் மாவட்டத்தில், புல்லாவெளி அருவி, கொட்டுவரை அருவி மற்றும் கோட்டை நங்காஞ்சியாறு அணைப் பகுதி, மதுரை மாவட்டத்தில், சுற்றுச்சூழல் சுற்றுலாத் தலமாக விளங்கும் குட்லாடம்பட்டி அருவி மற்றும் திருச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள புளியஞ்சோலை அருவி பகுதிக்கு வருகைபுரியும் சுற்றுலாப் பயணிகளுக்கு அணுகுசாலை, சிமெண்ட் சாலை, குடிநீர் வசதி, நடைபாதை, அருவியில் குளியல் மேற்கொள்ளும் இடத்தில் பாதுகாப்பு கைப்பிடிகள் போன்ற அடிப்படை வசதிகள், உடைமாற்றும் அறைகள், திடக்கழிவு மேலாண்மை, தகவல் பலகைகள், முதலுதவி வசதி, பூங்கா அமைத்தல் போன்ற பணிகள் ரூ. 10.20 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.



11. ஊட்டி, குன்னூர், கொடைக்கானல், ஏற்காடு மற்றும் பிற முக்கிய சுற்றுலா தலங்களில் உள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல்களை தரம் உயர்த்தும் பணிகள் ரூ.18.80 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், ஊட்டி, குன்னூர், கொடைக்கானல், ஏற்காடு, ஒகேனக்கல், கோயம்புத்தூர், திருச்சி, கிருஷ்ணகிரி, ஓசூர், தஞ்சாவூர், பிச்சாவரம், கன்னியாகுமரி, இராமேஸ்வரம், திருச்செந்தூர், காஞ்சிபுரம், திருநெல்வேலி மற்றும் மாமல்லபுரம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள ஓட்டல்களில் உள்ள தங்கும் அறைகள், உணவகம், சமையலறை மற்றும் ஒப்பனை அறை ஆகியவற்றை தரம் உயர்த்தும் பணிகள் ரூ.18.80 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

10. தமிழ்நாட்டில் கிராமியச் சுற்றுலா (Rural Tourism) மற்றும் வான்நோக்கு சுற்றுலா (Astro Tourism) ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு சாத்தியக்கூறு அறிக்கை (Feasibility Study Report) ரூ. 50 இலட்சம் செலவில் தயாரிக்கப்படும்.

பரபரப்பான வாழ்க்கைச் சூழலில் மக்கள் இயற்கையை ரசிக்க அதிக ஆர்வம் காட்டுவதால் சமீபகாலமாக வான்நோக்கு சுற்றுலா பிரபலமடைந்து வருகிறது. வான்நோக்கு சுற்றுலா என்பது இரவு நேரத்தில் வானத்தைப் பார்ப்பது அல்லது வானியல் தொடர்பான கண்காணிப்பு நிலையங்கள் அமைப்பது போன்ற வசதிகளை உள்ளடக்கியதாகும்.

தமிழ்நாட்டின் அழகிய கிராமப்புறங்கள் சுற்றுலாப் பயணிகளுக்கு நெஞ்சில் நீங்கா அனுபவங்களை வழங்குகின்றன. கிராமப் பகுதிகளில் உள்ள பண்ணைகள், விவசாய நடைமுறைகள் போன்றவை சுற்றுலா மேம்பாட்டிற்கு வழிவகுப்பதுடன் சுற்றுலாப் பயணிகள் விவசாயிகளுடன் கலந்துரையாடி, ஆழ்ந்த கற்றல் அனுபவங்களைப் பெற ஒரு வாய்ப்பாக அமைகிறது. பண்ணை சுற்றுலாவில் கிராமப்புறக் கலாச்சாரம், உணவு வகைகள், இயற்கை காட்சிகள், துடிப்பான திருவிழாக்கள், கிராமப்புற வாழ்க்கை போன்றவை சுற்றுலாப் பயணிகளுக்கு மறக்க முடியாத அனுபவங்களை வழங்கும். மேலும், கிராமப்பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் வகையில், வலுவான வருவாய் ஆதாரமாக விளங்குகின்றன. எனவே, வான்நோக்கு சுற்றுலா மற்றும் கிராமியச் சுற்றுலாவை மேம்படுத்த சாத்தியமான இடங்களை கண்டறியவும், தொடர்பான திட்டங்களை செயல்படுத்தவும் சாத்தியக்கூறு அறிக்கை ரூ. 50 இலட்சம் செலவில் தயாரிக்கப்படும்.



3. கடற்கரை மாவட்டங்களான இராமநாதபுரத்தில் உள்ள தொண்டி கடற்கரை, கன்னியாகுமரியில் சங்குதுறை, சொத்தவிளை கடற்கரை பகுதி, சூரிய காட்சிமுனை மற்றும் தூத்துக்குடி மாவட்டம், காயல்பட்டினம் கடற்கரை பகுதிகளில் ரூ.6.50 கோடி மதிப்பீட்டில் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

பல்வேறு ஆன்மீகத் தலங்களைக் கொண்ட இராமநாதபுர மாவட்டத்தில் உள்ள தொண்டி கடற்கரை நகரம், கன்னியாகுமரியில் சூரிய காட்சிமுனை, முக்கிய கடற்கரைகளான சங்குதுறை, சொத்தவிளை கடற்கரை பகுதி மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தில் வரலாற்று புகழ்பெற்ற காயல்பட்டினம் கடற்கரை பகுதிக்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளுக்கு பல்வேறு வசதிகளை ஏற்படுத்தும் வகையில் நடைபாதை அமைத்தல், அமரும் இருக்கைகள், அடிப்படை வசதிகள் போன்ற பல்வேறு சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் ஆகியன ரூ.6.50 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

4. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அமைந்துள்ள அவதானப்பட்டி ஏரிப்பகுதி மேம்பாடு, திருப்பத்தூர் மாவட்டத்தில் ஏலகிரி மலையில் அமைந்துள்ள புங்கனூர் ஏரி மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்தில் தாமரைக்குளம் ஏரியில் படகு குழாம் மற்றும் இதர சுற்றுலாப் பணிகள் ரூ. 5.70 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

மாம்பழ உற்பத்தியில் முன்னணி மாவட்டமாக விளங்கும் கிருஷ்ணகிரியில் அமைந்துள்ள அவதானப்பட்டி ஏரியில் படகு சவாரி மற்றும் பல்வேறு சுற்றுலா வளர்ச்சிப் பணிகளும், திருப்பத்தூர் மாவட்டத்தில் அழகான இயற்கை சூழலில் ஏலகிரி மலையில் அமைந்துள்ள புங்கனூர் ஏரி மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்தில் கிழக்குத் தொடர்ச்சி மலையின், செஞ்சி மலையடிவாரத்தில் அமைந்துள்ள தாமரைக்குளம் ஏரியில் புதிதாக படகு குழாம் அமைத்தல் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கு பல்வேறு நவீன வசதிகள் ரூ. 5.70 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.



9. தஞ்சாவூர் மாவட்டம் புதுப்பட்டினம் கடற்கரை மற்றும் சென்னைக்கு அருகில் உள்ள பழவேற்காடு ஏரிப்பகுதி ஆகியவற்றில் பல்வேறு சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்வதற்கு ஏதுவாக சுற்றுலாப் பெருந்திட்டம் (Master Plan) ரூ.1.00 கோடி செலவில் தயாரிக்கப்படும்.

தமிழ்நாட்டின் பாரம்பரிய சுற்றுலாத் தலமாக விளங்கும் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள புதுப்பட்டினம் கடற்கரை மற்றும் சென்னைக்கு அருகில் உள்ள இந்தியாவின் இரண்டாவது பெரிய உப்பு நீர் ஏரியாக விளங்கும் பழவேற்காடு ஏரிப்பகுதிக்கு வருகைபுரியும் சுற்றுலாப் பயணிகளுக்கு பல்வேறு சுற்றுலா வசதிகள் மற்றும் சிறந்த அனுபவங்களை வழங்கும் வகையில் சுற்றுலாப் பெருந்திட்டம் (Master Plan) ரூ.1.00 கோடி செலவில் தயாரிக்கப்படும்.

8. தமிழ்நாட்டில் நீர் சாகச விளையாட்டுக்களை ஊக்குவிக்கும் பணிகளுக்கு ரூ.1.00 கோடி செலவிடப்படும்

தமிழ்நாடு 1,076 கிமீ நீளமுள்ள கடற்கரையை கொண்டுள்ளது. இது இந்தியாவின் மொத்த கடற்கரைகளில் 13 சதவீதத்திற்கும் அதிகமானதாகும். மாநிலத்தில் சாகசச் சுற்றுலா பிரபலமடைந்து வருவதால், தமிழ்நாட்டில் சாகசச் சுற்றுலா செயல்பாட்டாளர்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவு உயர்ந்துள்ளது. செலவிடும் திறன் அதிகமுள்ள சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதிலும், நிலையான சுற்றுலாவை வழங்குதலையும், சுற்றுலாப் பொருளாதாரம் வளர்ச்சியடைவதையும் தமிழ்நாடு ஊக்குவிக்கிறது. நீர் சாகசச் சுற்றுலாவின் பிரிவுகளான பாய் படகு (Sailing), அலைச்சறுக்கு (Surfing), படகோட்டுதல் (Rowing), குறும்படகு (Kayaking) மற்றும் இதர நீர் சாகச விளையாட்டுக்களை ஊக்குவிக்கும் பணிகளுக்கு ரூ. 1.00 கோடி செலவிடப்படும்.



5. நீலகிரி மாவட்டத்தில் உல்லாடாவில் கிராமியச் சுற்றுலாவை மேம்படுத்தல், கேத்தி மைனல்லா மற்றும் கோயம்புத்தூர் மாவட்டம் வால்பாறை Hornbill பகுதியில் காட்சிமுனை அமைத்தல் ஆகிய பணிகள் ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

மேற்குத் தொடர்ச்சி மலையில் அமைந்துள்ள நீலகிரி மாவட்டத்தில், கேத்தி மைனல்லா, கோயம்புத்தூர் மாவட்டம் வால்பாறை Hornbill பகுதியில் காட்சிமுனை அமைத்தல் மற்றும் கிராம வாழ்வியல் சூழலில், விவசாயம் சார்ந்த தொழில்கள் மூலம் சிறந்த அனுபவங்கள் வழங்குதலை மேம்படுத்தும் விதமாக மற்றும் பொருளாதார மேம்பாட்டினை ஊக்குவிப்பதற்கும் காரணியாக விளங்கும் கிராமியச் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் நீலகிரி மாவட்டம் உல்லாடா பகுதியில் ரூ.3.00 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

6. சுற்றுலாப் பயணிகளுக்கு சிறந்த அனுபவங்களை வழங்குதல், கலாச்சாரங்கள், பல்வேறு இயற்கை தலங்கள், பழங்கால மரபுகள் ஆகியவற்றை காட்சிப்படுத்தும் வகையில், பல்வேறு சுற்றுலாத் தலங்களை மேம்படுத்தும் விதமாக பெருந்திட்டம் (Master Plan) ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்படும்.

கள்ளக்குறிச்சியில் கல்வராயன்மலை, கோயம்புத்தூரில் வால்பாறை, திண்டுக்கலில் சிறுமலை, நாமக்கலில் கொல்லிமலை, சிவகங்கையில் செட்டிநாடு பகுதி, திருப்பத்தூரில் ஏலகிரி, திருவண்ணாமலையில் ஜவ்வாது மலை மற்றும் ஈரோட்டில் தாளவாடி, ஹாசனூர், குத்தியாலத்தூர் ஆகிய இடங்களில் உள்கட்டமைப்பு மற்றும் சுற்றுலா சேவைகளின் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் பிரபலப்படுத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கிய சுற்றுலாப் பெருந்திட்டம் (Master Plan) ரூ. 2.00 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்படும்.



7. மருத்துவம் மற்றும் ஆரோக்கியச் (Medical and Wellness Tourism) சுற்றுலாவை மேம்படுத்தும் வகையில் கோயம்புத்தூரில் பல்வேறு மருத்துவ தொழில் பங்குதாரர்களின் ஒத்துழைப்புடன் மருத்துவச் சுற்றுலா மாநாடு ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் நடத்தப்படும்.

கடல்கடந்து பல நாடுகளிலிருந்து வருகைபுரியும் நோயாளிகளுக்கு குறைந்த கட்டணத்தில் அதிநவீன மருத்துவ சேவைகளை வழங்கும் இடமாக, சர்வதேச அளவில் தமிழ்நாடு பெயர்பெற்று விளங்குகிறது. மருத்துவச் சுற்றுலா என்பது சுற்றுலாவில் வேகமாக வளர்ந்து வரும் பிரிவுகளில் ஒன்றாகும், இது முக்கிய மருத்துவ சேவைகள் மற்றும் உடல்நலம் பேணும் சுற்றுலா ஆகிய இரண்டையும் உள்ளடக்கி நவீன, பாரம்பரிய மருத்துவ முறைகளுடன் மிகப்பெரிய சந்தையாக உருவெடுத்துள்ளது.

மருத்துவம் மற்றும் ஆரோக்கியச் சுற்றுலாவுக்கான அமைப்பை வலுப்படுத்தும் முயற்சிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த சுற்றுலாப் பிரிவுகளை சிறந்த முறையில் மேம்படுத்தவும், பிரபலப்படுத்தவும் அதிநவீன உடல்நலம் பேணும் சிகிச்சைக்கான உள்கட்டமைப்புடன் வரலாற்று சிறப்புமிக்க "சித்தா" மருத்துவ முறையையும் தமிழ்நாடு பெற்றுள்ளது. எனவே, இதன் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, தமிழ்நாட்டில் மருத்துவம் மற்றும் ஆரோக்கியச் சுற்றுலாவினை பிரபலப்படுத்தும் பிரிவுகளில் பணிபுரியும் சுற்றுலா நிறுவனங்கள், பயண முகமைகள், மருத்துவச் சுற்றுலா பயண ஏற்பாட்டாளர்கள், மருத்துவ சேவை வழங்கும் மருத்துவமனைகள், ஆரோக்கியச் சுற்றுலா ஏற்பாட்டாளர்கள் ஆகியோர்களின் ஒத்துழைப்புடன் மருத்துவம் மற்றும் ஆரோக்கியச் சுற்றுலா மாநாடு கோயம்புத்தூரில் ரூ.1.00 கோடி செலவில் நடத்தப்படும்.